**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No. 278/2018**

**Prosecution witness 10**

| | |
|---|---|
| **Name** | **: Dr.கிருபா சங்கர்** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **: முதுநிலை உதவி மருத்துவர், ஆத்தூர் அரசு மருத்துவமனை** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused present. Counsel Present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 27.10.2025.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:-</u>

1) நான் தற்போது முதுநிலை உதவி மருத்துவராக ஆத்தூர் அரசு மருத்துவமனையில் பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 18.12.2017 அன்று பணியிலிருந்த போது 1வது வார்டு வீரகனூர், கெங்கவல்லி சேர்ந்த அங்குசாமி, த.பெ. வேலுசாமி, வயது 40, என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 நபர்கள் உருட்டு கட்டையால் 18.12.2017 அன்று காலை 10.30 மணிக்கு உருட்டு கட்டையால் தாக்கியதாக வந்து சிகிச்சையில் சேர்ந்தவரை பரிசோதித்த போது அவருக்கு வலதுபக்க தலையில் 2 கிழிந்த காயங்கள் காணப்பட்டன. காயம் அளவு 2 x 1 x 1 செ.மீ மற்றும் 2 x 1 x 1 செ.மீ அளவுள்ள காயங்கள் இருந்தன. மேலும் (1)வலதுபக்க கண்ணத்தில் ஒரு சிராய்ப்பு காயமும் 6 x 1 செ.மீ, (2) மேலும் இடது கை முழங்கை மூட்டு பகுதியில் ஒரு சிராய்ப்பு காயமும் 2 x 1 செ.மீ, (3) வலது பக்க முழங்கை மூட்டு பகுதியில் 2 x 1 செ.மீ ஒரு சிராய்ப்பு காயமும், (4) இடது முழங்காலில் ஒரு சிராய்ப்பு காயமும் 2 x 1 செ.மீ, (5) வலது முழங்காலில் 2 x 1 x 1 செ.மீ ஒரு குத்தப்பட்ட காயமும் இருந்தன. மேலும் இரண்டு முழங்கையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டதற்காக மாவு கட்டு போடப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை

மேற்கொண்டு பின்பு 13.01.2018 தேதியில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். இது சம்மந்தமாக மேற்படி காவல் ஆய்வாளர் விசாரித்த போது மேற்படி அங்குசாமி-க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து இரண்டு முழங்கையிலும் ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று அளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான். அது அ.சா.ஆ.6 மேற்படி காயங்கள் குறித்து வழங்கிய கருத்துரை மேற்குறிப்பு அ.சா.ஆ.7 இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1) அங்குசாமி சிகிச்சையில் சேர்ந்த போது என்னை 2 நபர் தர்கியதாக தெரிவித்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் அவரின் வீடு என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தன்னை தாக்கிய ஆயுதம் இரும்பு பைப்பு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் செருப்பால் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டில் குச்சியால் அடித்தாக எழுதப்பட்டுள்ளது. சாட்சி Wooden stick என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறார். குச்சிக்கும் உருட்டு கட்டைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் வந்து தான் முதல் சிகிச்சை எடுத்து கொண்டார் என்றால் வீரகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் சிகிச்சை எடுத்து கொண்டு மேல் சிகிச்சைகாக தான் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் வந்தார். வீரகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்ன சிகிச்சை எடுத்து கொண்டு வந்தார் என்றால் தெரியாது என்றால் சரியல்ல. சிகிச்சை சீட்டுடன் தான் அவர் என்னிடம் வந்தார். அந்த ஆவணங்களை விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கிழிந்த காயங்கள் தையல் இடப்படவில்லை. அவ்வாறு இருந்தால் அதை விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிட்டிருப்பேன். அடிப்பட்ட நபருக்கு தலையில் ஏற்பட்ட காயம் ரத்தம் உறைந்து காணப்பட்டதா என்று விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை. மேற்படி நபருக்கு ஏற்பட்ட முழங்கை எலும்பு முறிவு சம்மந்தமாக எந்த இடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்று குறிப்பட்டு சொல்லவில்லை. எந்த வகையான எலும்பு முறிவு என்று குறிப்பட்டு சொல்லவில்லை.

(2) எலும்பு முறிவு சம்மந்தமாக அவருக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை. ஒரு இடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டால் அந்த இடத்தில் ரத்தம் உறைந்து கடுமையான வீக்கம் ஏற்படும் என்றால் சரிதான். ஆனால் இந்த காயத்தில் ஏற்பட்ட ulna எறும்பு முறிவுக்கு வீக்கம் வெளியில் தெரியாது. எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் வீக்கம் இருந்ததாக விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை. அடிப்பட்ட நபருக்கு எக்ஸ் ரே எடுத்ததாக விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை. அதேபோல நான் கொடுத்த கருத்துரையிலும் எக்ஸ் ரே எடுத்ததாக விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை. அடிப்பட்டவருக்கு தலையில் ஏற்பட்ட ஒழுங்கற்ற காயங்கள் ஒரு நபர் ஒழுங்கற்ற கூர்மையான ஒரு பொருளின் மீது விழும் போது ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் செப்டிக் டேங்க் குழியில் வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது தவறி விழுந்தால் அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் கீழே விழும்போது கையை ஊன்றும் போது மேற்சொன்ன கைகளில் ஏற்பட்ட காயங்கள் போலவும் மற்ற காயங்கள் போலவும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்போ பின்போ ஏற்பட வாய்ப்பு உள்ளது.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.10.27 17:43:36 +0530

**Assistant Sessions Judge,**
**Attur.**